தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தில் தொடர்புடைய

# ‘அதிகாரிகளுக்கு எதிராக துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது’

## ஐகோர்ட்டில், அரசு அறிக்கை தாக்கல்

சென்னை, நவ.18-

தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தில் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஐகோர்ட்டில் தமிழ்நாடு அரசு அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

### பரிதாப சாவு

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கடந்த 2018-ம் ஆண்டு மே 22-ந்தேதி பொதுமக்கள் நடத்திய போராட்டத்தின் போது, போலீஸ் துப்பாக்கி சூடு நடத்தினர். இதில், 13 பேர் பரிதாபமாக இறந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து வழக்கைவிசாரணைக்கு எடுத்தது. பின்னர், தமிழ்நாடு அரசு அளித்த விளக்கத்தை ஏற்று, அந்த வழக்கை முடித்து வைத்து விட்டது. இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், மனித உரிமை ஆர்வலர் ஹென்றி திபேன் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை நீதிபதிகள் ஜெ.நிஷாபானு, என்.மாலா ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்ச் விசாரித்து வருகிறது.

### போலீஸ் மீது நடவடிக்கை இல்லை

இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக நீதிபதி அருணா ஜெகதீசன் விசாரணை கமிஷன் அளித்த அறிக்கையின்படி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? என்று தமிழ்நாடு அரசுக்கு நீதிபதிகள் கேள்வி எழுப்பியிருந்தனர். இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் ஜெ.நிஷாபானு, என்.மாலா ஆகியோர் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில் அதிகாரிகளுக்குள் அனுப்பப்பட்ட கடிதங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அதில், உள்துறை கூடுதல் செயலாளருக்கு, தமிழ்நாடு டி.ஜி.பி., சங்கர் ஜிவால் கடந்த 9-ந்தேதி எழுதிய கடிதத்தில், நீதிபதி அருணா ஜெகதீசன் கமிஷன் அறிக்கையின்படி, எந்த போலீசார் மீதும் குற்ற வழக்கு (எப்.ஐ.ஆர்.) பதிவு செய்யப்படவில்லை. குற்ற நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை” என்று கூறியுள்ளார்.

### டி.ஜி.பி., பரிசீலனை

பின்னர், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

நீதிபதி அருணா ஜெதீசன் அறிக்கையின் அடிப்படையில், சம்பவம் நடந்தபோது, தூத்துக்குடி கலெக்டராக இருந்த என்.வெங்கடேசுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து 2022-ம் ஆண்டு அக்டோபர் 25-ந்தேதி நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அவர் குற்றச்சாட்டை மறுத்து கடந்த மார்ச் 23-ந்தேதி விளக்க கடிதம் அனுப்பியுள்ளார். எனவே, இவருக்கு எதிராக துறை ரீதியான விசாரணை நடத்த மூத்த ஐ.ஏ.எஸ்., அதிகாரி தீரஜ்குமார் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல, அப்போதைய தென்மண்டல ஐ.ஜி., சைலேஷ்குமார் யாதவ், டி.ஐ.ஜி., கபில் குமார் சி.சரத்கர், தூத்துக்குடி போலீஸ் சூப்பிரண்டு பி.மகேந்திரன், துணை போலீஸ் சூப்பிரண்டு லிங்கத்திருமாறன், இன்ஸ்பெக்டர்கள் என்.ஹரிகரன், டி.பார்த்திபன் ஆகியோருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அவர்கள் விளக்கம் அளித்துள்ளனர். அந்த விளக்கம் டி.ஜி.பி., பரிசீலனையில் உள்ளது.

### பங்கு என்ன?

இன்ஸ்பெக்டர் திருமலை மீது சி.பி.ஐ., வழக்குப்பதிவு செய்துள்ளதால், இவர், கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். சப்-இன்ஸ்பெக்டர்கள் சொர்ணமணி, ரென்னிஸ், போலீஸ்காரர்கள் ராஜா, தாண்டவமூர்த்தி, மதிவாணன், கண்ணன், எம்.சங்கர், சதீஷ்குமார், ஏ.சுடலைக்கண்ணு, தாசில்தார்கள் சேகர், கண்ணன், சந்திரன் ஆகியோருக்கு எதிராக துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

இதை படித்து பார்த்த நீதிபதிகள், இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. பதிவு செய்துள்ள வழக்கின் தற்போதைய நிலை என்ன? ஒரு இன்ஸ்பெக்டருக்கு எதிராக மட்டும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? அப்படியென்றால் மற்ற அதிகாரிகளுக்கு எதிரான குற்ற வழக்கு கைவிடப்பட்டதா?

குற்றச்சாட்டுக்குள்ளான அதிகாரிகள் பணியில் தொடருகின்றனரா? அல்லது ஓய்வு பெற்று விட்டார்களா? இந்த அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் என்ன? துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் இவர்களின் பங்கு என்ன? என்று சரமாரியாக நீதிபதிகள் கேள்வி கேட்டனர்.

### விளக்கம் வேண்டும்

பின்னர், இந்த கேள்விகளுக்கு எல்லாம் அடுத்த விசாரணையின்போது விளக்கம் அளிக்கவேண்டும் என்று தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டனர். விசாரணையை டிசம்பர் 11-ந்தேதிக்கு தள்ளிவைத்தனர்.

DAILY THANTHI
தினத் தந்தி
NO.1 TAMIL DAILY